முருகப்பெருமான் துணை

**மகான் பிருகுமகரிஷி அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

20.05.2022, வெள்ளிக்கிழமை

1. மாறுதலை கலியினில் செய்திட
மாதவசியாக வந்த அரங்கா
ஆறுதலாக உலகினில் உன்
அகத்தியர் சன்மார்க்க சங்கம் இருக்க
2. இருக்கவே ஞானவான்கள் பெருகி
இவ்வுலகம் ஞானவழி வருமெனக்கூறி
கருத்தாக அருளாசி தன்னை
கண்டுரைப்பேன் சுபகிருது விடை திங்கள்
3. திங்களிலே சஷ்டி திகதி புகர் வாரம்
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 06 ம் நாள், 20.05.2022 வெள்ளிக்கிழமை)
தேசிகனுக்கு பிருகுமகரிஷி யானும்
ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
ஓங்கார குடில் படைத்து வழிநடத்தும்
4. வழிநடத்தும் ஞான மார்க்கத்தை
வழிகாட்டலாக வாழ்வாதாரமாக எண்ணி
தெளிவுபட உலக மக்கள்
தேசிகன் வழி தொடர்ந்து வர
5. வருகவே உலகினில் மாற்றம்
வந்தடையும் ஞானிகள் துணைபட
முருகப் பெருமானின் வழிபாடே
முழுமை ஞானம் தரும் வழியென
6. வழியென உணர்ந்து வணங்கி
வல்லமைபட நித்ய பூசைகள்
அழியாமை வேண்டி செய்துவர
அகிலத்தில் அனைவருக்கும் சித்தி
7. சித்திகள் குருவருள் வடிவாக
சிவராஜயோகி அரங்கன் சொரூப
சித்திகளாக மக்கள் அடைந்து
செப்பிடுவேன் பலம் அடைவர்
8. பலம்தரும் ஞானமாம் அரங்கன்
பழுதில்லா சன்மார்க்க நெறி
வலம்வர உலகம் தன்னில்
வையகமே பாதுகாப்புக் கூடி
9. கூடியே எங்கும் நல்ல தலைமை
குவலயமெங்கும் நற் காரியங்கள்
கூடியே வளர்ச்சி நிலை காணும்
குவலயத்தில் பருவமழை தவறா

10. தவறாக கீர்த்தி கண்டு
தக்க கழனிகிருஷி நீர் வளம் குன்றா
அவனியே பசுமை வளம் காணும்
அரசியல் ஆன்மீகம் என அனைத்திலும்

11. அனைத்திலும் களை எடுக்கப்பட்டு
ஆறுமுகன் தலைமை நிறைந்த
துணை கொண்ட ஞான ஆட்சி மலரும்
தெரிவித்த அருளாசி முற்றே

–சுபம்–